1990 மே 9]

பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் 4 தவணைகளில் அதாவது 2 ஆண்டுகளில் 16 கோடி ரூபாயைக் கட்ட முன்வந்திருக்கிறார்கள். அதற்கான ஆணையை வழங்க முதல்வர் அவர்கள் பரிசீலித்து வருகிறார்கள்.

பகுதி நேர கூட்டுறவுப் பயிற்சி.

* 7690 திரு. ஆர். சிங்காரம் :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கூட்டுறவுப் பயிற்சி பெறாமல் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கூட்டுறவுத் துறையில் பணியாற்றி வரும் எல்லாப் பணியாளர்களுக்கும் கட்டாயமாக பகுதி நேர கூட்டுறவுப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''பகுதி நேர கூட்டுறவுப் பயிற்சியில் சேருவதற்கு அனைத்து தகுதிகள் உள்ள கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.''

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று சொன்னார்கள். கோவாப்பரேடிவ் இன்ஸ்டியூட்டுகள் என்று இருக்கின்றனவே, அந்த பயிற்சியை அமைச்சர் சொல்கிறாரா? அல்லது பயிற்சி பெறாத கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களைச் சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : துணைத் தலைவரவர்களே, பணியாற்றிக் கொண்டிருக்கிற கூட்டுறவு சங்க ஊழியர்கள் கூட்டுறவுப் பயிற்சி பெறாவிட்டால் சில நிபந்தனைகளின் அடிப்படையில் அவர்களுக்குச் சில தகுதிகள் இருக்குமேயானால், அவர்கள் கூட்டுறவுப் பயிற்சி பெறுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படியானால் அதை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வந்து இருக்கிறீர்களா? அதற்குக் கால அவகாசம் ஏதும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, அது நடைமுறையில் இருக்கிறது. இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக வருடத்தில் 240 நாட்கள் ஒருவர் வேலை செய்திருந்தால் அவருடைய வேலை நிரந்தரமாக்கப்படும் என்பது அரசின் ஆணை. மதுரை மாவட்டத்தில், கூட்டுறவுத் துறையில் மதுரை மாவட்ட கூட்டுறவு வங்கியில் 800 நாட்கள், 900 நாட்கள், 1,000 நாட்கள் என்று வேலை பார்த்தவர்களை, தற்காலிகமாக வேலை நீக்கம் செய்திருப்பதால், அவர்கள் நீதி மன்றம் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக வேலை யாட்களை அங்கே போட்டிருக்கிற காரணத்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது முற்றிலும் தொடர்பில்லாத கேள்வி என்றாலும், அவர்கள் தொடர்ந்து அங்கே 240 நாட்கள் வேலை செய்திருக்கிறார்களா? எதற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள் என்று அதற்கான காரண விளக்கங்கள் எங்களுக்குத் தெரிந்தால்தான் உரிய பதிலை மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்கு வழங்க இயலும். அந்த விபரங்களைக் கோரி, தனியாகக் கேள்வி எழுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, கூட்டுறவு பயிற்சி பெற்று பணி புரிபவர்களைத் தவிர, பயிற்சி பெறாமல் கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகின்ற அந்த ஊழியர்கள் 5 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்திருந்தால் அவர்களுடைய கூட்டுறவுப் பயிற்சிக்கு சில தகுதிகள் அடிப்படையில் பயிற்சி அளிக்கப்படும் என்றார்கள். அப்படிப்பட்ட தகுதிகள் இல்லா விட்டாலும், அந்தச் சலுகைகளை அவர்களுக்கு அளித்து, குறைந்த எண்ணிக்கையில் உள்ள அந்த மாதிரி ஊழியர்களுக்கும் பயிற்சியை அளித்து, அவர்களுக்கும் பாதுகாப்பை அளிப்பதற் கான ஏற்பாடுகளைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் நியமிக்கப்படுகிற போது, முறையாக வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நியமிக்கப்பட்டு இருக்கிறார்களா, அல்லது அப்படி வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நியமிக்கப்படாவிட்டால் பணி வரன்முறைப் படுத்தப்பட்டிருக்கிறதா என்பதையெல்லாம் மனதில் கொண்டு, முறைப்படி பணி வரன்முறைப் படுத்தப் பட்டிருக்கிறதா, அல்லது வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பணி அமர்த்தப்பட்டிருக்கிறார்களா என்ற விபரங்களை மைய மாகக் கொண்டுதான் அவர்கள் பயிற்சிக்கு அனுப்பப்படுகிறார் கள்.

1990 மே 9]

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் 5 ஆண்டுகள் பணி புரிந்து அந்தப் பணியில் இருந்து விலக்கியவர்களை மீண்டும் அந்தப் பணியில் சேர்த்துக் கொள்வதற்கு அவர்கள் பணி புரிந்த 5 ஆண்டுக் காலத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு, அவர்கள் வயது வரம்பு மிகுந்து போகாமல் அந்தப் பணிக் காலத்தை எடுத்துக்கொண்டு, அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9-40 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப் போன்று தனிப்பட்ட வழக்குகள் அல்லது தனிப்பட்ட பிரச்சினைகள் அப்படி ஏதாவது இருக்குமானால் அது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அது பரிசீலிக்கப்படும்.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பயிற்சி பெற்ற கூட்டுறவு விவசாய நாணயச் சங்க செக்ரட்டரிகள், மத்திய வங்கி ஊழியர்களாக மாற்றப் படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் விளக்கமாக, புரிந்து கொள்ளத்தக்க வகையில் தனிக் கேள்வி போட்டால் நலமாக இருக்கும்.

பையூர் வேளாண்மை ஆராய்ச்சி பண்ணையை விரிவுப்படுத்துதல்

* 8131 திரு. வி. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) கிருஷ்ணகிரி வட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி பையூர் வேளாண்மை ஆராய்ச்சி பண்ணையை விரிவுபடுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.